**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கமுதி.**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**குற்றவியல் நடுவர். கமுதி**

**2026 ம் வருடம் மார்ச் திங்கள் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை**

குற்றவியல் பல்வகை மனு எண். 86/2026

சி.பி. எண். 109/2024

பாலமுருகன் (28/24),
த/பெ. பாலசுப்பிரமணியன்,
3/67A மேற்குத்தெரு, கொண்டுலாவி கிராமம்,
சோனைபிரியான்கோட்டை அஞ்சல்,
முதுகுளத்தூர் வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம். ... மனுதார் / வாகனத்தின் உரிமையாளர்

/ இடையே/

1. அரசுக்காக ஆய்வாளர் அவர்கள்,
பேரையூர் காவல் நிலையம்,
இராமநாதபுரம் மாவட்டம்.
குற்ற எண். 05/2024
U/s 379 IPC and 21(1) MMDR Act
C.C.No. 111/2025 Split up in CC 50/2026.

2. வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கமுதி.

3. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
பரமக்குடி.

4. உதவி இயக்குநர் அவர்கள்,
கனிமவள பாதுகாப்பு அலுவலர்,
இராமநாதபுரம். ... குற்ற முறையீட்டாளர்கள்

இம்மனுவின் மீதான இறுதி விசாரணை 13.03.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர். திரு.C. ரஜேஸ் கண்ணா., அவர்களும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர்

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.13 15:47:36 +0530

நிலை-1 திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி அவர்கள் முன்னிலையாகி வாதிட்டதின் பேரில் இரு தரப்பு வாதங்களையும் உரிய கவனத்துடன் கேட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

1. இம்மனுவானது 503 & 497 BNSS-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் வழக்கு சொத்தான பதிவெண் இல்லாத Power Trac Euro 50 என்று எழுதப்பட்ட ஊதா நிற டிராக்டர் மற்றும் டிரைலருடன் கூடிய நான்கு சக்கர வாகனத்தை இடைக்கால பொறுப்பில் தரக் கோரி மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர் பதிவெண் இல்லாத Power Trac Euro 50 என்று எழுதப்பட்ட ஊதா நிற டிராக்டர் மற்றும் டிரைலருடன் கூடிய நான்கு சக்கர வாகனத்தின் உரிமையாளர் என்றும், குற்றமுறையிடுவோரால் குற்ற எண். 5/2024 U/s. 379 IPC and 21(1) MMDR Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி வாகனம் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் C.P.No. 109/2025 என இருந்து வருவதாகவும், மேற்படி வாகனத்தின் Chasis No. T053663104EM, Engine No. E3753153 என்றும், மேற்படி வழக்கிற்கும் நான்கு சக்கர வாகனத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமும் கிடையாது என்றும், மேற்படி வாகனம் வெயில், மழை, காற்றில் நீண்டநாட்களாக இருந்து வந்தால் வாகனம் பாதிக்கப்பட்டு பயன்படுத்த இயலாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்றும், மேற்படி நான்கு சக்கர வாகனத்தை வைத்து தான் அன்றாடம் பிழைப்பு நடத்தி வருவதாகவும், மேற்படி நான்கு சக்கர வாகனம் மற்றும் டிரைலர் இல்லாததால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளார் என்றும், மேற்படி நான்கு சக்கர வாகனத்தை தொடர்ந்து நீதிமன்ற காவலில் இருந்து வந்தால் அதனுடைய செயல்திறன் இழந்து வாகனத்தின் என்ஜீன் பழுதாகி மிகுந்த கஷ்டத்தை ஏற்படுத்தும் என்றும், மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் நீதிமன்றம் ஒப்படைக்கும் பட்சத்தில் வாகனத்தை விற்கவோ, மாற்றம் செய்யவோ மாட்டார் என்றும், விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளார் என்றும், மேற்படி வாகனத்தை பிணையில் விடும்பட்சத்தில்

தக்க பிணையம் அளிக்க தயாராக உள்ளார் என்றும், மேற்படி வாகனம் மதுரை Axix Bank Finance ன் மூலம் எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பதிவெண் இல்லாத Power Trac Euro 50 LMPS என்று எழுதப்பட்ட ஊதா நிற டிராக்டர் மற்றும் டிரைலருடன் கூடிய நான்கு சக்கர வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்காலப்பொறுப்பில் ஒப்படைக்குமாறு மனுதாரர் வழக்கறிஞர் வாதிட்டார்.

3. காவல் துறையினர் பதில் மனுவில் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட Escort Power Track Euro 50 Lmpc என்ற நான்கு சக்கர வாகனத்தை குற்றமுறையிடுவோரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சி.பி.எண்.109/2024 பெறப்பட்டுள்ளது என்பதாலும், வழக்குச் சொத்தை மனுதாரரிடம் ஒப்படைத்தால் மனுதாரர் வாகனத்தை வேறுயாரிடமாவது விற்கக்கூடும் என்பதாலும், வானத்தின் நிறத்தை மாற்றக்கூடும் என்பதாலும், மேலும் வழக்கானது நீதிமன்ற விசாரணையில் இருந்து வருவதாலும் வழக்குச் சொத்தை மனுதாரரிடம் ஒப்படைக்க கடும் ஆட்சேபணை தெரிவித்துள்ளனர். கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரும் இதே கருத்தை தெரிவித்துள்ளார்.

4. மனு, பதில் மனு மற்றும் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் சி.சி. எண். 111/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. 18.02.2025ம் தேதியன்று ஏற்பட்ட வாய்தாவில் 1,2,4 எதிரிகள் தன்னிச்சையாக குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தி வழக்கு கோப்பு முடிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் 3ம் எதிரிக்கு எதிராக வழக்கை பிரித்து எடுத்து நடத்தக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது அனுமதிக்கப்பட்டு சி.சி. எண். 50/2026 ஆக நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்குச் சொத்தை பயன்படுத்தியே குற்றச் சம்பவம் நடைபெற்றுள்ளது என அரசு தரப்பில் தெரிவித்துள்ள போதிலும், இவ்வழக்கின் மனுதாரர் 3ம் தரப்பினர் என தெரியவருவதாலும், மேற்படி வழக்குச் சொத்தானது மனுதாரருக்கு பாத்தியமானது என்று தெரிய வருவதாலும், வழக்குச் சொத்திற்கு சி.பி.எண்.109/2024 என்று நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மனுதாரரும் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.13 15:47:49 +0530

சம்மத்திருப்பதன் பேரிலும், மேற்படி மதுரை Axix Bank Finance மூலம் வாங்கப்பட்டுள்ளது என்பது ஆவணங்கள் வாயிலாக தெரிய வருவதாலும், மனுதாரர் வழக்கு சொத்தான பதிவெண் இல்லாத Power Trac Euro 50 LMPS என்று எழுதப்பட்ட ஊதா நிற டிராக்டர் மற்றும் டிரைலருடன் கூடிய நான்கு சக்கர வாகனம் அவருக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க அவரின் Sales Invoice ன் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாலும், **மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் சுந்தர்பாய் அம்பாலால் தேசாய் எதிர் குஜராத் மாநிலம் (2002(10) SSC 253) வழிகாட்டுதலின் படியும் மற்றும் Criminal Rules of Practice 2019 Rule 257(1)ன் படி** வழக்குச் சொத்தை இடைக்காலமாக ஒப்படைப்பதே நீதியின் நலனுக்கு சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. முடிவில் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து உரிமையாளரான மனுதாரர் வசம் வழக்குச் சொத்தை இடைக்காலமாக ஒப்படைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

<u>நிபந்தனைகள்;–</u>

1. மனுதாரர் மேற்படி வழக்குச் சொத்தான பதிவெண் இல்லாத Power Trac Euro 50 என்று எழுதப்பட்ட ஊதா நிற டிராக்டர் மற்றும் டிரைலருடன் கூடிய நான்கு சக்கர வாகனத்திற்கு ஈடாக ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) இருநபர் பிணையம் வழங்க வேண்டும் எனவும்,

2. மனுதாரர் வழக்குச் சொத்தான பதிவெண் இல்லாத Power Trac Euro 50 என்று எழுதப்பட்ட ஊதா நிற டிராக்டர் மற்றும் டிரைலருடன் கூடிய நான்கு சக்கர வாகனத்தின் Sales Invoice ன் அசலை நீதிமன்றத்தில் சமர்பித்து தலைமை எழுத்தர் நகலுடன் ஒப்பிட்டு சரிபார்த்த பின்னர் மனுதாரரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும்,

3. மனுதாரர் வழக்குச் சொத்திற்கு அசல் ஆர்.சி புக் பெற்றவுடன் அசலை நகலுடன் நீதிமன்றத்தில் சமர்பித்து தலைமை எழுத்தர் நகலுடன் ஒப்பிட்டு சரிபார்த்த பின்னர் பெற்றுச் செல்ல வேண்டும் என்றும்,

4. வழக்கு சொத்து ஒப்படைக்கப்பட்ட காலகட்டத்தில் மனுதாரர் வழக்கு

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.13 15:47:56 +0530

சொத்தினை உருமாற்றம் செய்யவோ, விற்பனை செய்யவோ, அடமானம் வைக்கவோ முயற்சிக்ககூடாது.

5. இந்த வழக்கு சொத்தினை விசாரணை காலத்திலும், நீதிமன்றம் கோரும் போது ஒப்படைக்க வேண்டும்.

6. இந்த நீதிமன்றத்தில் வழக்கு சொத்திற்கான புகைப்படம் சி.டி, ஆகியவற்றினை மனுதாரர் ஒப்படைக்க வேண்டும்.

7. இந்த வழக்கு சொத்திற்கான பஞ்சநாமா தலைமை எழுத்தர் எழுதி பெற்றிட வேண்டும்.

8. மேற்படி வாகனத்தை அரசுக்கு ஆதாயப்படுத்தும் நடவடிக்கைக்காக கேட்கும் போது உடன் எந்தவித காரணமும் சொல்லாமல் இந்நீதிமன்றத்திலோ அல்லது விசாரணை நீதிமன்றத்திலோ அல்லது நீதிமன்றம் உத்தரவிடும் அதிகார வரம்பிடமோ ஒப்படைப்பேன் என்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் எனவும்,

9. மேற்படி நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை மீறும் பட்சத்தில் இந்த உத்தரவு தன்னிச்சையாக ரத்து செய்யப்பட்டு, மேற்படி வழக்கு சொத்தானது அரசுக்கு ஆதாயம் செய்வதற்கான நடவடிக்கை தொடங்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு (13.03.2026) இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.13 15:48:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.